Koviloor Digital Library

உ

ஓம் தத் ஸத்.

பரப்பிரஹ்மணேநம:

ரிபுமுனிவர் அருளிச்செய்த

ரிபுகீதையிலுள்ள

மஹாவாக்கிய ரகசியம்.

KOVILOOR MADALAYAM

இஃது,

சென்னை வியாசர்பாடி

ஸ்ரீ. கர. சிவப்பிரகாச சுவாமிகள்

மடத்தின் மாணவர்களால்,

சென்னை வியாசர்பாடியில்
பால குமரன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை அணு இரண்டு.

1937.

Acc. NO. 1122.8
R65,9

Koviloor Digital Library

Koviloor Digital Library

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ கணேசாய நம:

ரிபு கீதை

மகா வாக்கியார்த்த இரகசியம்.

பரசிவ வணக்கம்.

ஆனைமுக னாறுமுக னருளாந் தேவி
  யனந்தகண மளவற்ற முனிவர் தேவ
ரேனையுள நல்லன்ப ரியாவ ராலு
  மெய்ப்பயனும் பெறவேண்டி யிதயத் தின்க
ணானமற வுபாசிக்கப் பட்டன் னோர்க்கிவ்
  குவந்தபய னருள்கருணை மூர்த்தி யாகி
வானமென வகண்டசிதா காய மான
  வத்துவதாம் பரசிவனை வணங்கல் செய்வாம்,

Koviloor Digital Library

நடேசர் வணக்கம்.

சுத்தசிதா காயமதா மெந்த வத்து
சுதந்தரமாந் தனதுபர சத்தி யோடே
பத்தரெலா முய்யும்வணங் கருணை யாலே
பரதத்வ வடிவாகத் திரண்டெ ழுந்தே
யத்துவிதா நந்தமுனா ரநுப வத்தி
னிசயமிங் கெல்லோரு மறியும் வண்ணம்
நித்தமுமே யானந்த நடனஞ் செய்யு
நிதமந்த வத்துவினை நினைவில் வைப்பாம். ()

இதுவுமது.

எவ்வடிவி னிடப்பாக மிலங்கா நின்ற
விவ்வுலக மனைத்துக்கு மாதா வாகு
மெவ்வடிவின் வலப்பாக மிலங்கா நின்ற
விவ்வுலக மனைத்துக்கும் பிதாவு மாகு
மெவ்வடிவின் பதத்திலுள சிலம்பி னோசை
யெவ்விதமா நூலுக்கு மேது வாகு
மெவ்வடிவின் விழிமூன்று விலக்கு மியாவு
மிணையற்ற வவ்வடிவே யெம்மைக் காக்க. (3)

Koviloor Digital Library

சிவன் முதலியோர் வணக்கம்.

அகிலசகன் ஞயகனு யநந்த சத்தி
யமைவுற்ற வகண்டசிவன் சரணம் போற்றி
நிகிலசகன் மாதாவாய் நித்யா நந்த
நிசவடிவா மம்பிகையின் சரணம் போற்றி
சகலவித விக்கினமுந் தீர்த்தெல் லோர்க்குஞ்
சாதகமாம் விநாயகனற் சரணம் போற்றி
தகைமைமிகு மன்பர்க்குச் சிவஞா னத்தைத்,
தந்தருளுஞ் சண்முகனற் சரணம் போற்றி.

நூல்.

சருவவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
சாலவுமே யரிதாகிக் குப்ப மாகிச்
சுருதிமுடி யனைத்தினுநற் சார மாகிச்
சுத்தமதாம் பரப்பிரம சொரூபந் தன்னை
யிருளறவே நேராக வறிவிக் கின்ற
வியல்புள்ள நான்குமகா வாக்கி யத்தின்
பொருளினையிங் கெல்லோர்க்கு மிதமே யாகப்
பூன்றசிவன் புகன்றபடி புகலு வாமே. (1)

Koviloor Digital Library

பெருமைமிகு மிருக்குமறை முடியி லுள்ள
பிரஞ்ஞானம் பிரமமெனும் வாக்ய மொன்று
மிருண்மருவா வெசுர்வேத முடியி லுள்ள
விலகுமகம் பிரமாஸ்மி வாக்ய மொன்று
மருண்மருவாச் சாமமறை முடியி லுள்ள
மகத்தான தத்வமசி வாக்ய மொன்று
மரியவதர் வணவேத முடியி லுள்ள
வயமான்மா பிரமமெனும் வாக்ய மொன்றும்.

இந்தவித நான்குமறை முடியின் கண்ணே
யிருக்கின்ற நான்குமகா வாக்கி யத்துண்
முந்தியதாம் பிரஞ்ஞானம் பிரம மென்றே
மொழிந்தமகா வாக்கினுடைப் பொருளைச்
[சொல்வா
மைந்தவிதிற் பிரஞ்ஞானம் பிரம மென்று
மருவுபத மிரண்டாகு மற்றி வற்றின்
முந்தியதாம் பிரஞ்ஞான பதத்தி னுக்கு
முக்கியமா மர்த்தத்தை மொழியக் கேளாய்.

Koviloor Digital Library

ஞானமதே பிரஞ்ஞான மென்ன லாகும்
ஞானத்தாற் சகலமுமே தெரிவ தாகும்
ஞானமதிற் றெரிகின்ற சகத்த னைத்தும்
ஞானத்திற் கற்பிதமாய்த் தெரிவ தாலே
ஞானமல தன்னியமா யொன்று மில்லை
ஞானமுத லெப்பொருளு ஞான மாத்ரம்
ஞானமதே நமதுநிச வடிவ மாகும்
ஞானமதே பரப்பிரம வடிவ மாமே. (4)

சருவசக நதிட்டான சொரூப மான
சத்திபஞா னாநந்த வத்து தானே
பிரமமெனும் பதத்தினுடை யர்த்த மாகும்
பிரமமதிற் கற்பிதமாய்த் தோன்று நின்ற
வொருபொருளும் பிரமத்திற் கயலே யாகா
துணர்வுற்ற பொருளெல்லாம் பிரம மாத்ரம்
பிரமமதே நமதுநிச சொரூப மாகும்
பிரமமதே பிரஞ்ஞான சொரூப மாமே. (5)

Koviloor Digital Library

பிரஞ்ஞானப் பொருடானே பிரம மாகும்
பிரமமெனும் பொருடானே பிரஞ்ஞா னங்கா
ணஞ்ஞான முதலியதா முபாதி யாலே
யகண்டபரம் பொருடானே யிரண்டு போலாம்
பிரஞ்ஞானம் பிரமமெனும் வாக்கி யர்த்தம்
பிறங்கியதா லுபாதியெலா நீங்கும் போது
விஞ்ஞான கனமான வத்து வொன்றே
வேறற்ற வகண்டார்த்த மாகி நிற்கும். (6)

பிரிவுற்ற வுபாதியுறுஞ் சீவன் றானே
பிரஞ்ஞான பதத்திறுடை வாச்சி யார்த்தம்
விரிவுற்ற வுபாதியுறு மீசன் றானே
விளம்பியிடும பிரமபத வாச்சி யார்த்த
மொருமித்த நிருபாதி வத்து தானே
யுபயவித பதத்திற்கு மிலட்சி யார்த்தந்
தெரிவித்த வுபயபத லட்சி யைய்யர் [ண்.
திகழுமகா வாக்கினுடை யகண்டார்த் தங்கா

Koviloor Digital Library
11228
765,9

அறைந்தபடி மகாவாக்கி னகண்டார்த் தத்தை
யறிந்துமன தம்மயமா யிதா மெல்லா
மறந்துசன தாவரனா மனைத்து நீங்கி
மயக்கமற நிற்பதுவே யகண்டா காரஞ்
செறிந்தமனே விருத்தியெனச் செப்ப லாகுஞ்
செப்புமகண் டாகார விருத்தி தானே
யறிந்தவரா லதிசுகமாஞ் சிவன் முத்தி
யாகுமென வங்கங்கே யறைய லாமால். (8)

சத்தியசிற் சுககனமாய்ச் சாந்த மாகிச்
சலனமிலாச் சாசுவத சுபாவ மாகி
நித்தியநிர்க் குணமாகி நிருவி கற்ப
நிரவயவ நிரஞ்சனமாய் நிறைந்து நின்ற
வத்துவித பரப்பிரம மானே னென்
றறிவுற்றம் மயமான விருத்தி தானே
சுத்தவகண் டாகார விருத்தி யென்று
சூட்சமுணர் ஞானிகளாற் சொல்ல லாகும். ()

கோவிலூர் ஆண்ட...

Koviloor Digital Library

சந்ததநான் பரப்பிரம சொரூப மன்றிச்
சற்றேனுஞ் சம்சாரி யல்ல வெனறே
யிந்தவித மறிவுற்றுச் சலத்திற் சேர்ந்த
கேகரச மாகின்ற லவண மேபோ
லந்தமிலா வகண்டபரப் பிரமத் தின்க
ணைக்கியமே யடைந்தமனோ விருந்தி தானே
மைந்தவகண் டாகார விருத்தி யென்று
மாசற்ற ஞானிகளான் மதிக்க லாகும் (10)

சொன்னவகண் டாகார விருத்தி தானே
சுகமேலா யிருக்கின்ற சிவன் முத்தி
பின்னையகண் டாகார விருத்தி நீங்கிப்
பிராரத்தம் யாவையுமே நீங்குங் காலை
யன்னியமா முபாதிகளோ ரணுவு மின்றி
யகண்டைக ரசமான வத்து வாக
மன்னியிருக் கின்றநிலை விதேக முத்தி
மற்றுமகண் டைகரச நிலைமை கேளாய். (11)

Koviloor Digital Library

ஓதிடும் பிரஞ்ஞான பதமுந் தள்ளி
வுரைசெய்த பிரமமெனும் பதமுந் தள்ளிப்
பேதமிலாப் பரப்பிரம நானே யென்று
பிரியமுடன் பழகியபா வனையுந் தள்ளி
யேதையுமே நினையாமல் வெறிதி ருந்திங்
கிவ்விதமா யிருப்பதெனு நினைவுந் தள்ளி
யீதெனவே யுணரவொணா திருப்புத் தானே
யென்றுமகண் டேகரச நிலைமை யாமே. (12)

மனதுடைய விகற்பங்க ளனைத்து மின்றி
மாயைமுத லுபாதிகளோ ரணுவு மின்றி
யனியமிலா வகண்டேக ரசசொ ரூப
மாகியிருக் கின்றநிலை விதேக முத்தி
சொனநிலைதான் சுபாவமதாய்க் கிட்டு மட்டுஞ்
சுழல்கின்ற விவகார மனைத்துந் தள்ளி
யனகவகண் டாகார விருத்தி தன்னை
யலப்பறவே யநவரத மப்யா சிப்பாய். (13)

Koviloor Digital Library

புகலுமகன் டாகார விருத்தி தன்னைப்
புரையறவே பழகியிடு மியல்பைக் கேளா
யகிலமுமே யகண்டபரப் பிரம மென்று
மதுதானே நானென்று நான தென்று
மிகழ்வறவே யெப்போது மிடை விடாம
லேகபர பாவனையே யிதயத் தின்கண்
விகலமறச் செய்வதுவே யகண்டா கார
விருத்திதனைப் பழகியிடு மியல்பாமைந்தா.

தேகமுத ஞானென்ன றுவித விர்த்தி
திகழ்சாட்சி நானென்னல் சாட்சி விர்த்தி
யேகபர நானென்ன லகண்ட விர்த்தி
யிம்மூன்று விருத்திகளி லிரண்டைத் தள்ளி
யாகுமகன் டாகார விருத்தி தன்னை
யகவாத மாதரவா யப்யாசித்துச்
சோகமுறுஞ் சித்தவிகற் பங்க டீர்த்துச்
சொன்னவகன் டாகாரச் சொரூப மாவாய்.

Koviloor Digital Library

இன்னவிதம் பிரஞ்ஞானம் பிரம மென்னு
மிலகுமகாவாக்கினுடையருத்தஞ்சொன்னோ
முன்னியதா யிக்குரைசெய் நீதி யெல்லா
மூன்றுமகாவாக்கிலுமேதெரிந்துகொள்வாய்
பின்னையகம் பிரமாஸ்மி யென்ப தாகப்
பேசுமகா வாக்கினுடைப் பொருளைக் கேளா
யன்லமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தி
லகம்பிரம மஸ்மியெனப் பதமூன் றுமே.(16)

முந்துமகம் பதத்துக்குச் சீவ னர்த்தம்
மொழிபிரம பதத்துக்கவ் வீச னர்த்த
மந்தமிலாச் சிவபர வயிக்கியந் தானே
யஸ்மியெனும் பதத்தினுடை யருத்த மாகு
மிந்தவித மிந்தமகா வாக்கி யத்தி
னேகரச மாகியுள வகண்டார்த் தத்தைப்
புந்தியினு லாய்ந்திதனை யறுப வித்துப்
புகன்றவகண் டேகரச் சொரூப மாவாய்.(17)

Koviloor Digital Library

பேதமுறு முபாதியினற் கிஞ்சிஞ் ஞத்வம்
பிறங்கியசர் வஞ்ஞத்வ மாதி யாவு
மோதியசீ வேசருடைத் தன்மம் போலா
முபாதியெலாம் விசாரித்துத் தள்ளுங் காலை
யாதியிலாச் சீவபர வைக்ய மிஞ்சு
மதுதானே யகண்டார்த்த மாம வற்றை
யோதுமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லுணர்ந்தந்த வகண்டார்த்த வடிவே யாவாய்.

அனகவகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மாசிரிய னருளியவா றறிந்த போதும்
பினையுமதை யுத்தியுடன் மனனஞ் செய்து [டுஞ்
பிராந்திதரின் சங்கையெலாம் பெயர்க்கவேண்
சொனவிதமாய்ச்சங்கையெலாம்பெயர்த்தபின்னர்ச்
சுழல்கின்ற விபரீத மனைத்துந் திர
வனிசமகம் பிரமாஸ்மி யென்ப தாக
வாதரவோ டப்யாசஞ் செய்ய வேண்டும். (19)

Koviloor Digital Library

சத்தியசிற் சுககனமாம் பிரம நானே
சாலவுப சாந்தபரப் பிரம நானே
நித்தியநிர்க் குணமான பிரம நானே
நிரவயவ நிரஞ்சனமாம் பிரம நானே
யத்துவித மானபரப் பிரம நானே
யகண்டமதாம் பரப்பிரம நானே யென்று
சத்துருவாம் விபரீதந் தீரு மட்டுஞ்
சந்ததமுஞ் சலியாமற் பழகவேண்டும். (20)

அகிலபரி பூரணமாம் பிரம நானே
யான்மாவுக் கபின்னபரப் பிரம நானே
சகலமுமாய்த் தெரிகின்ற பிரம நானே
சட்பாவ விகாரமிலாப் பிரம நானே
துகளணுவு மருவாத பிரம நானே
துவிதமிலாச் சுத்தபரப் பிரம நானென்
றகமருவு விபரீதந் தீரு மட்டு
மகலாத மாதரவாய்ப் பழகவேண்டும். (21)

Koviloor Digital Library

இந்தவிதம் விசாரித்த விவேகி யெல்லா
மேகபரா பாவனையே யிடைவி டாமற்
சந்ததமுஞ் செய்தத்னால் விபரீ தத்தைச்
சற்றேனு மின்றித்து நாசஞ் செய்தே
யந்தவகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மானுவகண் டார்த்தத்தி னனுப வத்தைப்
புந்திதனிற் பிரதிபந்த மொன்று மின்றிப்
பூரணமா யெப்போதும் பொருந்த வேண்டும்.

பலவிதமாம் வாதனையுந் தூரத் தள்ளிப்
பகர்ந்தபடி யகண்டார்த்த மநுபவிப்பா
யிலகுமகம் பிரமாஸ்மி வாக்கி யார்த்த
மிவ்விதமா யிசைப்புற்றே யினியு னக்குத்
திலசமதாந் தத்வமசி வாக்கி யார்த்தந்
திடமாகச் சித்தமிசைத் தெரியச் சொல்வாந்
தலைமைபதாய்த் தயங்கியவிவ் வாக்கி யத்திற்
றத்வமசி யெனமூன்று பதங்க ளாமே. (23)

Koviloor Digital Library

மாயையெனு முபாதியுறு மீசன் றானே
மருவியதற் பதமுரைசெய் வாக்கியார்த்த
மாயதன தவித்தையுறு சீவன் றானே
யறைகின்ற துவம்பதமொன் றிலக்கியார்த்த
மேயமதா முபாதியெல் [illegible]
ரேகவிலக் கணமான வத்துத் தானே
தூயபத மிரண்டுக்கு மிலட்சியார்த்தந்
தொடர்புற்ற வைக்கியமே யசிப தார்த்தம்.()

சொல்லியவிவ் வைக்கியமா மகண்டார்த் தத்தைச்
சுத்தமதாந் தத்வமசி வாக்கி யத்தாற்
கல்லெனவே இடமாக வறிந்தெப் போதுங்
கலங்காம லகண்டாக ரசமே யாவா
யெல்லையிலா வகண்டவடி வாகு மட்டு
மிதரமுணர் விருத்தியெலாந் தூரத் தள்ளிப்
புல்லுமகண் டாகார விருத்தி தன்னைப்
புரையறவே பழகியதாற் பூன்ற ணுவாய்.(25)

KOVILOOR MADALAYAM

Koviloor Digital Library

தற்பதலட் சியமான பிரம ரூபந்
துவம்பதலட் சியமான நீயே யாவா
யற்பமுமே யிதிலைய மமைவ தில்லை
யகண்டசிவன் றன்றுணை யறைந்த துண்மை
சொற்பமிலா வகண்டபரி பூர்ண மான
சுத்தமதாம் பரப்பிரம நீயே யென்று
செப்பியிடுங் குருபரனே குருவா கின்றேன்
செப்பியவா றறிந்தவனே சிட னுனேன். (26)

சத்தியசிற் சுககனமாம் பிரம நீயே
சகலபரி பூரணமாம் பிரம நீயே
நித்தியநிட் களமான பிரம நீயே
நிரந்தரமாய் நிறைந்தபரப் பிரம நீயே
யத்துவித மானபரப் பிரம நீயென்
றையமற வுபதேசஞ் செய்கின் றோனே
யுத்தமனுங் குருவாவன் மற்றோ ரெல்லா
மொருகாலு முயர்வுற்ற குரவ ராகார், (27)

Koviloor Digital Library

அலைவுற்ற வறிவான பிரம நீயே
யகண்டேக ரசமான பிரம நீயே
நிலைபெற்ற நிச்சலமாம் பிரம நீயே
நிராவரண மானபரப் பிரம நீயே
சலமற்ற சாந்தபரப் பிரம நீயே
சதாநந்த கனமான பிரம நீயென்
றலைவற்ற வுபதேசஞ் செய்கின் றோனே
யுத்தமனுங் குருவாவன் மற்றோ ராகார். (28)

உச்சமதாங் குருவருளு மகண்டார்த் தத்தை
யுவகையுட னுள்ளபடி கேட்ட பின்னர்
நிச்சலமாம் புத்தியினு னிச்ச யித்து
நிருமலமா யகம்பிரம மானே னென்றே
துச்சமிலா வநுபூதி யடைந்த வன்றான்
றுகளற்ற சற்சீடன் மற்றோ ரெல்லா
மெச்செயலைச் செய்யினுமே சீட ராகா
ரேகபர மறிந்தவனே சீட னாவன். (29)

Koviloor Digital Library

சர்வமகா மந்திரமு முபதேசிப் போர்
சாமான்ய குரவரெனச் சாற்ற லாகு
மிருமையிலாப் பரப்பிரம நீயே யென்றிங்
கிணையற்ற வுபதேசஞ் செய்கின் றோனே
பெருமைமிகுஞ் சற்குருவென் றுரைக்க லாகும்
பின்வெகுவாய்ப்பேசுவதாற்பெறும்பேறென்ன
வரியபர நீயென்போ ஞசா ஞனே
னகம்பிரமமெனவறிவோன்மாஞ்ஞானேன்.

ஆதலினாற் பரப்பிரம நீயே யென்றிங்
கருள்பவனே யாசிரிய னெனவே வோர்ந்து
சாதகமாஞ் சற்குருவி னுபதே சத்தைச்
சத்தியமா நம்பியதைச் சாதிப் போனே
பேதமில்லா வகண்டபரப் பிரம ஞானம்
பெற்றதன்றிப் பவபந்த மனைத்துந் தீர்ந்து
போதகன மானபர வடிவே யாவன்
புகன்றதிலோ ரணுவேனு மைய மில்லை. ()

Koviloor Digital Library

அகிலமறை முடிவுக்கு மகண்ட மான
வத்துவித பரப்பிரம சொரூபந் தானே
தகைமைமிகுந் தாற்பரியப் பொருளா மென்றுந்
தற்பிரம நீயென்று முபதேசித்த
மகிமைமிகுஞ் சற்குருவின் வாக்கி யத்தான்
மகத்தான பரம்பொருளைக் கேட்டுள் ளத்தில்
விகலமற வறிவதுவே சிரவணங் காண்
வேறொன்றுஞ் சிரவணமே யன்று மைந்தா.

அருள்வடிவா மாசிரிய னருளிச் செய்த
மகிலமகா வாக்கினுடை யகண்டார்த் தத்தை
மருளறவே கேட்டுணர்தல் சிரவணங் காண்
மற்றவெலாஞ் சிரவணமே யாகா தென்றுஞ்
சிரவணமே செயவுற்ற பொருளை மீண்டுஞ்
சிரத்தையுடன் புத்தியினாற் சிந்தை செய்தல்
பிரமையெலாந் தீர்க்கின்ற மனன மாகும்
பேசியவிம் மனனத்தின் யுத்திசொல் வாம்.()

Koviloor Digital Library

திரிசியமாய்ச் சிதைகின்ற வுடனு னல்ல
திய்ங்கிவிடும் பௌதிகமாம் பொறினு னல்ல
பிரிவுபெறு நானுவா முயிர்நா னல்ல
பிறந்துநசிக் கின்றமன முதனு னல்ல
விருள்வடிவா மஞ்ஞான வுருனு னல்ல
விவையாவு மொருமித்த திரளு னல்ல
நிருமலமா யாவையுமே நிகழ்த்தா நின்ற
நீக்கமிலாச் சின்மாத்ர சொரூப மேநான். ()

தூலவுடல் சூக்குமதே கத்தி லில்லை
தூலவுடல் சூக்கவுட லிவ்வி ரண்டு
மாலயமாங் காரணதே கத்தி லில்லை
யவைமூன்றுந் துரியத்தி லிலவே யில்லை
கோலமுறுந் தேகமெலா மிலாத தானுங்
கூறப்படாச் சின்மாத்ர சொரூப மொன்றே
காலமொரு மூன்றிலுமே யிருப்ப தானுங்
களங்கமிலாச் சின்மாத்ர சொரூபமே நான்.

Koviloor Digital Library

கனவினிடை நனவில்லை யிவ்வி-ரண்டுங்
காரணமாஞ் சுழுத்திதனி லில்லை யந்த
நனவுகனு சுழுத்திகளுந் துரியத் தில்லை
நாலுவித வவத்தைகளுஞ் சுத்தத் தில்லை
சொனவிதமா யவித்தையெலா மிலாத தாலுஞ்
சுத்தமதாஞ் சின்மாத்ர சொரூப மொன்றே
யநவரத மழியாம லிருப்ப தாலு
மத்துவித சின்மாத்ர சொரூபமே நான். ()

தேகமுதற் சடமான விஷைய மெத்துந்
திரிசியமாய்க் கடமெனவே நசிப்ப தாலு
மேகபர சின்மாத்ர வடிவா மான்மா
வெப்போதுந் திருக்குருவா யிருப்ப தாலும்
பாகமுறுந் தேகாதி மித்தை யாகும்
பகுப்பற்ற வான்மாவே யுண்மை யாகு
மாகையினூற் றேகாதித் திரளு னல்ல
வதுருக வறிவான வான்மாவே நான். (37)

Koviloor Digital Library

சத்தியஞா ஞானந்த சுபாவ மான்
சகலவதிட் டானபரப் பிரமத் தின்கட்
சித்திரவ நிருதசட துக்க மான
செகத்தெல்லாங்கற்பிதமாய்த்தோற்றலாலே
யித்துவித செகத்தெல்லா மாயுங் காலே
யிலகுமதிட் டானபரப் பிரம மேயாஞ்
சுத்திகையிற் கற்பிதமாய்த் தோற்றும் வெள்ளி
சோதிக்கி லதிட்டான சுத்தி தானே. (38)

இருமையெனத் தோற்றியவிச் செகத் தனைத்து
மிருக்கின்ற திலங்குகின்ற தின்ப மென்ன
மருவியவிவ் வநுபூதி யாயுங் காலே
மன்னுமதிட் டானத்தின் சுபாவ மேயாஞ்
சருவவதிட் டானபரப் பிரமத் துக்கே
சத்தியஞா னந்தத் தன்மை யன்றி
யொருபொழுது மில்லாத வெறும்பொய் யான
வுலகத்துக் கேதியவித் தன்மை யுண்டோ.

Koviloor Digital Library

காலமொரு மூன்றிலுமே யிருக்கை யாலுங்
கற்பிதமாம் யாவையுமே விளக்க லாலுஞ்
சாலவுமே யாவையினு மினிமை யாலுஞ்
சத்தியஞா னானந்த சொரூப நானே
யாலயமா மென்னிடையிற் கனவே போல
வகிலமுமே கற்பிதமாய்த் தோற்ற லாலே
கோலமுறத் தோற்றியிடுந் தோற்ற மெல்லாங்
குறைவற்ற வதிட்டான வடிவா நானே. ()

என்னிடையிற் கற்பிதமாய்க் கனவின் கண்ணே
யிலங்கியதாம் யாவையுமே யாயுங் காலை
மன்னுமதிட் டானமதா நானே யன்றி
மற்றெவையு மெனக்கயலா யிலாத தேபோற்
பின்னமிலா வென்னிடையி னனவின் கண்ணே
பிறங்கியதாம் யாவையுமே யாயுங்காலை
யன்னவதிட் டானமதா நானே யன்றி
யற்பமுமே யெனக்கயலா யிலவே யில்லை. (

Koviloor Digital Library

ஓதியவா றுண்மையினை யோருங் காலை
யுபாதியிலா வெனதுநிச சொரூபத் திக்கும்
பேதமிலாப் பரப்பிரம சொரூபத் திக்கும்
பேசுமிலக் கணமொன்று யிருப்ப தாலே
யாதியிலா வகண்டபர வடிவே நானென்
றநவரத மாய்வதுவே மனன யுத்தி
மாதவனே யிவ்விதமா மயக்கந் தீர
மனனத்தின் சாதகமாம் யுத்தி சொன்னோம்.

சந்தனமென் றோதியிடும் விருட்ச மீதே
சங்கையறக் காணென்னு மாத்தன் சொல்லைச்
சுந்தரமாக் கேட்கினுமே யதனை நன்றுச்
சோதித்தே சங்கையெலாந் தீர்ப்ப தேபோ
லந்தமிலா பரப்பிரம நீயே யென்றிங்
காசிரிய னருளினுமே யதனை நன்றுப்
புந்தியுறும் யுத்தியினால் விசாரஞ் செய்தே
பொருந்தியதன் சங்கையெலாம் போக்கவே
[ண்டும்.

Koviloor Digital Library

சிரவணமும் மனனமுமே செய்த பின்னர்
செறிவுற்ற விபரீத மனைத்தாங் தீர
விரவுபக லெப்போது மிடை விடாம [டும்
லினிமையொடு நிதித்தியாசஞ் செய்ய வேண்
பரவியிடும் விசாதீய விருத்தி யின்றிப்
பரம்பரையான் சசாதீய விருத்தி தானே
யிருமையிலா நிதித்தியாச மாகு மித்தா
லெய்தியதன் விபரீதம் யாவுந் தீரும். (44)

செகம்பரணா னீதெனவே வேறு வேறாய்ச்
செறிகின்ற விசாதீய விருத்தி யின்றி
யகம்பிரமம் பிரமமக மகமெல்லா மென்
றநவரத மிடையறவே தொடரா நின்ற
தகும்பிரம பாவனையாம் விருத்தி தானே
தடையற்ற சசாதீய விருத்தி யாகு
மிகும்பிரிய முற்றிதனை யப்யா சிக்கின்
மேவுவிப ரீதமெலா மடைவாய்த் தீரும்.(45)

Koviloor Digital Library

பொருந்திநிதஞ் செய்கின்ற சிரவணத் தாற்
புகலுமசம் பாவனைதான் முன்பு நீங்கி
வருந்திநிதஞ் செய்கின்ற மனனந் தன்னால்
வாளாவாம் சம்சயபா வனையு நீங்கி
விரிந்துநிதஞ் செய்கின்ற நிதித்தியா சத்தால்
விபரீத பாவனையு நீங்கும் போது
நிரந்தரமாம் பரப்பிரம சாட்சாத் கார
நிச்சலமாந் தன்மனதி னிகழு மன்றே. (46)

சத்துருவாம் பிரதிபந்த மொன்று மின்றிச்
சலனமிலாப் பரப்பிரம சுகத்தை மேவி
யித்துவித நினைவணுவு மிலாது நீங்கி
யிருளான வாவரண மனைத்து நீங்கிச்
சித்துருவாம் பரப்பிரம சொரூபத் தின்கண்
க்ஷீரசல நியாயம்போற் சேர்ந்து நிற்கும்
புத்தியுடை விருத்தியினிற் பிரதிவிம் பிக்கும்
பூரணசை தன்னியமே சாட்சாத் காரம். (47)

Koviloor Digital Library

பேசியவிப் புத்தியுடை விருத்தி தானே
பிறங்குமகண் டாகார விருத்தி யாகு
மாசறவிவ் விருத்தியினிற் பிரதிபிம் பிக்கு
மறிவுருவே யகண்டபர சாட்சாத் கார
மேசமொடிவ் வகண்டபர சாட்சாத் கார
நிட்டையினைப் பெற்றவரே முத்த ராவ
ரீசனுடை யுபயதிருப் பதந்தன் னாணை
யியம்பியதி லெள்ளளவு மைய மில்லை. (48)

இன்னவித மூன்றுமகா வாக்கி யத்தி
னேகரச மாகுமகண் டார்த்தஞ் சொன்னோம்
பின்னையுனக் கயமான்மா பிரம மென்னும்
பேசுமகாவாக்கினுடைப்பொருளைச்சொல்வா
மன்னியமி லந்தமகா வாக்கி யத்தி
லயமான்மா பிரமமெனப் பதமூன் றாகும்
பன்னுபத மூன்றுக்கு மடைவே யாகப்
பகர்கின்ற வருத்தத்தைப் பரிந்து கேளாய்.

Koviloor Digital Library

சித்திரமா முபாதியுறுஞ் சீவன் றானே
செப்புமயம் பதத்துக்கு வாச்சி யார்த்தம்
வித்தரமா முபாதியுறு மீசன் றானே
விளம்பியிடு மான்மபத வாச்சி யார்த்தஞ்
சுத்தமதாஞ் சிவபர சொரூபந் தானே
சொல்லியவிவ் வுபயபத லட்சி யார்த்த
மத்திரமா முபயபத லட்சி யத்தி
னைக்கியமே பிரமமெனும் பதத்தி னர்த்தம்.

அறைந்தவண மிந்தமகா வாக்கி யத்தா
னைக்கியமா மகண்டார்த்த மறிந்து கொண்டு
செறிந்தபர சீவருடை யுபாதி யெல்லாஞ்
செவ்வியதாம் விசாரத்தா னேதி செய்திங்
சுறிந்தபடி யகண்டபர வடிவே னானென்
றனவரத மாதரவா யப்யா சித்து
மறந்தினை துருவான வகண்டார்த் தத்தை
மறவாம லெப்போது மநுபவிப் பாய். (51)

Koviloor Digital Library

மற்றுமொரு விதமாயிவ் வாக்கி யத்தின்
மதிக்கின்றபொருளினையுமுரைப்பக்கேளாய்
சற்றமிருண் மருவாத சுவப்பிர காச
சைதன்ய வடிவான பிரத்யக் கான்மா
வுற்றவய மான்மாவென் றுரைக்கப் பட்ட
வுபயவித பதத்துக்கு மருத்த மாகும்
முற்றமிலா விவ்வுலகின் மூல வத்து
மொழிவுற்ற பிரமபதத் தருத்த மாமே.(52)

பாவனமாம் பதங்களுடை லட்சியத்தின்
பகுப்பற்ற வைக்கியமே வாக்கி யார்த்தஞ்
சிவபர பேதத்துக் கேது வாகச்
செறிகின்ற வபரோட்ச பரோட்சத் துவாதி
யாவையுமே வுபாதியினுற் செறிந்த தென்றே
யிதனையெலாம் விசாரித்து நேதி செய்திங்
கோவலற மிஞ்சுவதா மகண்டார்த் தத்தை
யுரைத்தபடி யெப்போது மநுப விப்பாய். ()

Koviloor Digital Library

இன்னவித மிருக்குமுதல் வேதாந் தத்தி
லிலங்கியவிந் நான்குமகா வாக்கி யத்தின்
பின்னமிலா வைக்கியமா மகண்டார்த் தத்தைப்
பேதமெனும் பிராந்தியெலாந் தீரும் வண்ண
மன்னசிவ னருளியவா றடைவாய்ச் சொன்னே
மறைந்தபடி யமுத்தமுற வப்யா சித்தே
நின்னுருவாய் நிலைபெற்ற வகண்டார்த் தத்தை
நிருமலமாய் நீயென்று மநுப விப்பாய். (54)

சுயமதுவாந் தத்வமசி யென்னும் வாக்யம்
சொல்லுமுப தேசமகா வாக்ய மாகு
மியலுமகம் பிரமாஸ்மி யென்னும் வாக்ய
மிலகுமநு பூதிமகா வாக்ய மாகு
மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரம வாக்யம்
மனனத்தி னப்யாச வாக்ய மாகு
மயமான்மா பிரமமென வறையும் வாக்ய
மவைக்கெல்லாஞ்சம்மதமாம்வாக்கியமாமே.

Koviloor Digital Library

ஆதலினாற் றத்வமசி வாக்கி யத்தா
லருளியவா றகண்டார்த்த மறிந்து கொண்டு
பேதமறப் பிரஞ்ஞானம் பிரம மென்று
பேசுமகா வாக்கதனுன் மனனஞ் செய்து
வாதகமி லயமான்மா பிரம மென்னும்
வாக்கதனற் சரியெனவே சம்ம தித்திங்
கோதுமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லுரைத்தவகண்டார்த்தத்தையநுபவிப்பாய்.

அனிசமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லகண்டபர பாவனையே யப்யா சித்து
நனிமருவும் பாவனையா நாம ரூப
காட்டமெலா நன்றாக நாசஞ் செய்து
தனிமருவும் துவிதத்தின் றொடர்பே யின்றித்
துகளற்ற வகண்டார்த்த மநுப வித்தவ்
வனியமிலா வகண்டார்த்த வடிவே யாவா
யவ்வண்ண மாகுவதே யகண்ட மோட்சம் ()

Koviloor Digital Library

தனதுநிச வடிவான வகண்டார்த் தத்தைத்
தவிரவொரு பொருளுமொரு காலு மில்லை
பினையுளதாய்க்காண்பவெலாஞ்சுத்தப்பொய்யே
பேசியவப் பொய்வடிவு மாயுங் காலை
யனியமிலா வகண்டபரப் பிரமந் தானு
மறைந்ததிலோ ரணுவேனு மைய மில்லை
சொனவகையேயகண்டார்த்தஞானம்பெற்றுச்
சுத்தபர வடிவாகி முத்த னுவாய். (58)

சகலமறை முடிவினுமே சார மாகிச்
சாலவுமே சாருவதற் கரிய தான
மிகவுமகா ரகசியமா மிவ்வர்த் தத்தை
மெய்யுணர்வா நந்தவடி வான வீச
னிகழ்வறவே புகன்றவிதம் புகன்றே மியாமு
மிப்பொருளையிசைத்தபடிகேட்டுணர்ந்தோர்
பகைமருவும் பவபந்த மனைத்துந் தீர்ந்து
பகுப்பற்ற பரப்பிரம வடிவே யாவர். (59)

Koviloor Digital Library

அகிலசகந் நாயகனும் பரேசன் றன்னை
யநவரத மாத்ரவா யாரா தித்து
மிகவுமருட் பெற்றவரே மனதின் சுத்தி
மேவினராய் விளம்புமகா வாக்கி யத்தின்
றருபொருளைத் தடையறவே யநுப வித்துத்
தன்மயமே யாவரென நிதாக னுக்கு
நிகழ்வுறவே ரிபுமுனிவன் கருணை யாலே
நிகிலமகா வாக்குகளின் பொருளுஞ் சொன்
[னான்.

அங்கமுத லனுவுமிலா தகண்டா கார
மாகியுள வத்துவித பரசி வத்தைச்
சங்கமறச் சந்ததமுஞ் சிவோக மென்னுஞ்
சலியாத பாவனையாற் பூசை செய்து
துங்கபர சிவகருணை திடமாய்ப் பெற்றுத்
தொடருமனோவிகற்பமெலாமுடனே தீர்ந்து
பங்கமிலாப் பரமசிவ போதங் கூர்ந்து
பரமசிவ பத்தனுநா னேனை யர். (61)

Koviloor Digital Library

வேறு.

வத்து நிர்ணய சாதகமா-மகா
வாக்கி யங்களி னற்பர சீவரின்
சுத்தமா யுள வைக்கிய மறிந்தவர்
சூழு மிப்பவ லேசமி லாமலே
நித்தியா நந்த வத்துவ தாகவே
நிற்ப ரென்றுர மாவிங்கு பேசுதல்
சத்தியா நந்தத் தாண்டவ மாடுநஞ்
சாம்ப மூர்த்தியின் பூரண ரூபமே.

நான்கு மகாவாக்கியார்த்தம் முற்றிற்று.

குருஸ்தோத்திரம்.

அனாதிபவ வாரிதியி லழிந்த வென்னை
யகண்டபர ஞானமெனு நாவாய் கொண்டு
சனாதனமாம் பரப்பிரம தீரத் தின்கட்
சகசமதா யேற்றியசற் குருவே போற்றி
வினைசமுறுந் தேகாதி நானென் றெண்ணி
விதம்விதமாந் துன்பமிகுந் திருந்த வென்னை
யனாமயமாம் பரப்பிரம நீயென் றோதி
யகண்டசுக நல்கியசற் குருவே போற்றி. (1)

Koviloor Digital Library

அகிலமுமே யகண்டப்ரப் பிரம மென்று
மதுதானே நீயென்று முபதேச சித்துச்
சகமுதலீ தின்மையதாஞ் சடநா னென்றுஞ்
சங்கையெலா. நீக்கியசற் குருவே போற்றி
விகலமுறுங் கருமத்தாற் கதியுண். டென்று
வெகுகால மயக்கமுடன் சுழன்ற வென்னைத்
தகமைமிகு மகண்டபர ஞானந் தந்து
தற்பரமே யாக்கியசற் குருவே போற்றி. (2)

அருள்வடிவா யெழுந்தருளி யென்னை யாண்ட
வகண்டபர வுருவான குருவே போற்றி
சருவவித வுலகத்துஞ் சார்வ தற்குச்
சாலவுமே யரியபர குருவே போற்றி
நிருமலமாய் நிட்களமாய் நிகரில் லாதாய்
நீக்கமற நிறைந்தபர குருவே போற்றி
பரசிவமாய்ப் பராற்பரமாய் பரமான் மாவாய்
பரப்பிரம மானபர. குருவே போற்றி. (3)

Koviloor Digital Library

விமலமதாய் வேறற்ற வகண்டா கார
விருத்தியினில்விளங்கியசற்குருவே போற்றி
யமலமதா யகண்டபர வித்தை யாகி
யவித்தையெலா நீக்கியசற் குருவே போற்றி
நிமலமதாம் வித்தைக்கு மப்பா லாகி
நிச்சலமாய் நின்றபர குருவே போற்றி
சமமதுவாய்ச் சற்றுமொரு சங்க மின்றிச்
சன்மாத்ர மானபர குருவே போற்றி. (4)

சத்தியசிற் சுககனமாங் குருவே போற்றி
சலனமிலாச் சாந்தபர குருவே போற்றி
நித்தியநிர்க் குணமான குருவே போற்றி
நிரஞ்சனமாய் நின்றபர குருவே போற்றி
சுத்தபர வெளியான குருவே போற்றி
சூட்சுமமாய் நிறைந்தபர குருவே போற்றி
யத்துவித பூரணமாங் குருவே போற்றி
யகண்டமதாஞ்சற்குருவேபோற்றிபோற்றி.

குருஸ்தோத்திரம் முற்றிற்று.

Koviloor Digital Library

Koviloor Digital Library

சென்னை, வியாசர்பாடி ஆநந்தாஸ்ரமமடத்தின்

புத்தக விளம்பரம்.

	ரூ.	அ.
ஸ்ரீ ஆத்ம புராணம்	8	0
ஸ்ரீபகவற்கீதை கூடார்த்த தீபிகை ...	4	0
வேதாந்த மகா சிந்தாமணி ...	4	0
நியாயப் பிரகாசம்	4	0
கைவல்லியம் (ஸ்ரீ பொ-சு.) உரை ...	3	0
தத்துவா நுசந்தானம்	2	8
இர[illegible]வலி	1	8
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரம்	0	12
உபதேச [illegible] ...	0	10
அத்[illegible]ந்திரார்த்த உரை	0	8
பிரம்ம[illegible] ...	0	5
சொரூபா[illegible]சந்தானம் ...	0	3
மஹா வாக்கிய ரகசியம் ...	0	2
அஷ்டோத்ர ஸத நாமாவளி ...	0	1

மூர்த்தி ஸ்வாமி,
ஸ்ரீ கர. சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயம்,
நெ. 48, எருக்கஞ்சேரி ரோட், வியாசர்பாடி,
பெரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, சென்னை.